**திவுலப்பிட்டி பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 02 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 26 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து திவுலப்பிட்டி பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 03 அலுவலக மேசைகளின் பெறுமதி ரூபா 46,912 தொகை கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 29 காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கணக்குகளின் பிரகாரம் பொதுக் களஞ்சிய இருப்பு ரூபா 23,219,605 ஆக இருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட மெய்மையாய்வின் பிரகாரம் இருப்பின் பெறுமதி ரூபா 119,765 ஆகும். இந்த வேறுபாடு இருப்பின் பெறுமதி ரூபா 119,765 ஆகும். இந்த வேறுபாடு கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சுடலைக் கூடத்திற்கு எரிவாயு கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 415,520 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 271,780 தொகையே கணக்கு வைக்கப்பட்டமையால் ரூபா 143,740 தொகையான செலவினம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற 06 முற்பணக் கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றுக்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே ரூபா 5,317,431 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

(i) 2018 மே 04 ஆந் திகதி வரையிலும் தீர்த்துவைக்கப்படாத முற்பண மீதி ரூபா 7,618,369 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடம் முதல் 03 வருடங்கள் வரை ரூபா 10,000 தொகை, 03 வருடம் முதல் 05 வருடம் வரை ரூபா 124,433 தொகை மற்றும் 05 வருடங்களுக்கு மேல் ரூபா 7,483,936 ஆகவும் காணப்பட்டன.

(ii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் வருமானக் கடன்பட்டோரின் மீதியில் 01 வருடத்திற்கும் 03 வருடங்களுக்கும் இடையே ரூபா 66,406,583 தொகையும், 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையே ரூபா 2,987,630 தொகையும் மற்றும் 05 வருடங்களுக்கு மேல் ரூபா 34,243,995 ஆகவும் காணப்பட்டன.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

(i) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் கடன்கொடுத்தோர் மீதியில் 01 வருடம் முதல் 03 வருடங்கள் வரை ரூபா 85,281,255 தொகை மற்றும் 03 வருடங்களுக்கு மேல் ரூபா 103,099,467 ஆகவும் காணப்பட்டன.

(ii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்கில் ரூபா 15,318,744 தொகையான மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் ரூபா 11,354,596 தொகை 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்குரியதாகும்.

**1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் கணக்காய்விற்குத் தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

(அ) தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 2,818,931 கூட்டுத்தொகையான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(ஆ) புதிய அலுவலக கட்டிடத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,457,350 தொகையான அலுவலக உபகரணங்களின் விலை, அளவு மற்றும் பெறுமதிகளின் சரியான தன்மையை பரீட்சிப்பதற்காக விலைப்பட்டியல் பத்திரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாகம்) விதி 19 | - | சகல அடியிதழ்களுடன் புத்தகங்கள் சபையின் செயலாளரின் பொறுப்பில் வைக்கப்பட வேண்டியிருந்ததுடன், அவற்றின் பாதுகாப்புத் தன்மை மற்றும் உரிய பாவனை தொடர்பாக செயலாளர் தனிப்பட்ட வகையில் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும், சபையின் அடியிதழ் புத்தகங்கள் களஞ்சிய உத்தியோகத்தரின் பொறுப்பில் காணப்பட்டன. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 371 | 39,127 | 03 வருடங்களுக்கு மேல் முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | 11,354,596 | 02 வருடங்களுக்கு மேற்பட்ட பொது வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 30,618,984 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,990,232 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

2017 திசெம்பர் 31 இல் தயாரிக்கப்பட்ட வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்டு 06 மாதங்களைக் கடந்த ரூபா 28,556 தொகையான 06 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமானம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2016 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2016 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 11,812,000 | 13,070,056 | 11,724,881 | 1,345,175 | 11,190,500 | 11,805,691 | 9,408,225 | 2,397,465 |
| வாடகை | 5,694,000 | 6,023,013 | 2,911,489 | 3,111,524 | 7,705,000 | 6,673,185 | 3,278,058 | 3.395,126 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,100,000 | 1,949,108 | 1,916,438 | 32,670 | 775,000 | 1,114,370 | 1,081,700 | 32,670 |
| ஏனைய வருமானம் | 6,879,000 | 10,332,870 | 10,332,870 | - | 6,318.000 | 7,906,199 | 7,906,199 | - |
| | 25,485,000 | 31,375,048 | 26,885,679 | 4,489,369 | 25,988,500 | 27,499,447 | 21,674,184 | 5,825,262 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

2017 ஆம் ஆண்டில் சிட்டையிடப்பட்ட வருமானத்தில் 98 சதவீதத்திற்கு அண்ணளவான தொகையொன்று ஆண்டின்போது சேகரிக்கப்பட்டிருந்த போதிலும், முன்னைய ஆண்டின் நிலுவை வருமானத்தின் அறவிடல் செயல்முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. விபரம் பின்வருமாறு.

| வருமான மூலம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 ஆம் ஆண்டின் நிலுவை | முன்னைய ஆண்டுகளின் நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,101,394 | 343,789 | 757,605 |
| வாடகை | 3,111,523 | 42,738 | 3,068,785 |
| மொத்தம் | 4,212,917 | 386,527 | 3,826,390 |

### 2.3.3 வீதவரியும் வரியும்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 871,878 தொகையான ஆதனவரி நிலுவையில் 05 - 10 வருடங்களுக்கு இடையே ரூபா 160,654 தொகையும், 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 270,600 நிலுவை மீதியும் காணப்பட்டதுடன் அந்த நிலுவை மீதியை அறவிடும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

**2.3.4 வாடகை**

**(அ) வாடகை**

10 வருடங்களுக்கு முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற வாடகை நிலுவை மீதி ரூபா 2,803,705 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,718,012 தொகையான மீதி கெஹெல்எல்ல உப அலுவலகத்திற்குரிய இறைச்சிக் கடை மற்றும் மீன் கடைகளுக்காக பிழையாக சிட்டையிடப்பட்டவைகளாகும். இந்த நிலுவை மீதியை பதிவழிப்பதற்கு 2017 ஒக்தோபர் 06 ஆந் திகதி உள்ளூராட்சித் திணைக்களத்தில் அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதிலும், இதுவரையிலும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் திவுலப்பிட்டி உப அலுவலகத்தில் சிட்டையிடப்பட்ட ரூபா 674,594 மீதியில் 1999 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான கால வீச்சிற்குரிய நிலுவை மீதியும் காணப்பட்டது.

**(ஆ) கடை வாடகை**

(i) திலுவலப்பிட்டி உப அலுவலகத்தில் ரூபா 176,697 தொகையான மொத்த நிலுவை கடை வாடகை மீதியில் 1999 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரையான காலவீச்சிற்குரியதாக 07 கடைகளில் ரூபா 90,554 தொகையான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. இந்தக் கடைகள் தற்போது உடைத்து அகற்றப்பட்டிருந்ததுடன், இந்தமீதியை பதிவழிப்பதற்காக 2017 ஒக்தோபர் 06 ஆந் திகதி உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது.

(ii) 14 துறு செவன கடைகளுக்குரிய ரூபா 86,143 தொகை 2008 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை மீதியாகக் காணப்பட்டதுடன் பிரதேச செயலாளரால் கையளிக்கப்பட்ட ஆதனங்களுக்குரியதாக இது காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 09 விடயங்களுக்காக மாத்திரமே உப விதி விதிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

விதிக்கப்பட்டிருந்த உப விதியின் பிரகாரம் சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த 09 இலக்குகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக 2017 ஆம் ஆண்டின் போது கூட்டுப்பசளைத் தளத்திற்கான மீண்டெழும் செலவினமாக ரூபா 4,066,667 தொகையும், மூலதனச் செலவினமாக ரூபா 6,933,319 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. ஆண்டின் போது 44,118 கிலோகிராம் கூட்டுப்பசளை உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன், உழைக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 527,262 ஆகும்.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தாமையின் காரணமாக அந்த நோக்கங்களுக்காக உலகளாவிய குறிகாட்டிகளின் மூலம் சபை அதிகாரப்பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரம் என்பவற்றைக் கட்டியெழுப்புவதற்கான நீண்ட காலத்திட்டம் என்பன 2018 யூன் 19 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்**

(அ) களஞ்சியப் பதிவேடு

களஞ்சியப் பொருட்களைப் பெறும்போதும், விநியோகிக்கும் போதும் இருப்புப் புத்தங்களில் குறித்துரைத்த பிரகாரம் குறிப்புக்கள் இடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) சுடலைக்கூட எரிவாயு செலவினம்**

2017 ஆம் ஆண்டில் மறந்தகஹமூல சுடலைக்கூடத்தில் 275 மனித உடல்களை தகனம் செய்வதற்காக 45 எரிவாயு சிலின்டர்கள் செலவிடப்பட்டிருந்ததுடன் கொட்டதெனிய சுடலைக்கூடத்தில் 104 மனித உடல்களை தகனம் செய்வதற்காக 60 எரிவாயு சிலிண்டர்களும் செலவிடப்பட்டிருந்தன. இந்த அசாதாரண வேறுபாட்டுக்காக முகாமைத்துவத்தால் மேற்பார்வை செய்து தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடமும் மிகையும்**

| **தரம்** | **அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை** | **உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை** | **வெற்றிடமான ஊழியர் எண்ணிக்கை** | **மிகை ஊழியர் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| பதவி நிலைத் தரம் | 03 | 03 | - | - |
| இரண்டாம் நிலை | 40 | 34 | 06 | - |
| ஆரம்ப நிலை | 160 | 162 | 07 | 09 |
| மொத்தம் | 203 | 199 | 13 | 09 |

2017 ஆம் ஆண்டு முதல் வேலைக்கள கட்டுப்பாட்டாளர் பதவியொன்று, 02 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் மற்றும் 03 வருமானப் பரிசோதகர் பதவிகள் என்பன வெற்றிடமாகக் காணப்பட்டன.

**(ஆ) ஊழியர் கடன்**

நீண்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படுகின்ற ஊழியர் கடன் மீதியில் 1994 ஆம் ஆண்டில் பணியிடமாற்றம் பெற்றுச்சென்ற இரண்டு உத்தியோகத்தர்களின் ரூபா 22,229 தொகை, சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து 25 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 12,954 தொகை, சேவையை விட்டுச் சென்ற 03 வருடங்களுக்கு மேற்பட்ட 04 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 34,760 தொகை மற்றும் ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து 02 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 15,940 தொகை என்பவற்றை உள்ளடக்கியிருந்தது. இந்த பழைய கடன் மீதிகளை அறவிடுவதற்கு சபையினால் இதுவரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

**(அ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம்**

சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய வியாபார நிலையங்களின் எண்ணிக்கை 215 ஆக இனங்காணப்பட்டிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டில் 144 வியாபார நிலையங்கள் மாத்திரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருந்தன. வியாபார அனுமதிப்பத்திர பதிவேட்டின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 529 வியாபாரங்களின் எண்ணிக்கை காணப்பட்டது.

**(ஆ) கட்டிட விண்ணப்பம்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திவுலப்பிட்டிய உப அலுவலகத்திற்கும், கெஹெல்லஎல்ல உப அலுவலகத்திற்கும் கிடைத்த 305 கட்டிட விண்ணப்பங்களில் 242 விண்ணப்பங்களுக்கு மாத்திரமே அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

**(இ) கணனி விற்பனை வரி**

சபை அதிகாரப் பிரதேசத்தில் கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்த காணிகள் தொடர்பாக விற்பனை விலையின் அடிப்படையில் அறவிட வேண்டிய ஒரு சதவீத வருமானத்திற்குப் பதிலாக உரிய விற்பனையாளர் சமர்ப்பித்த விலை விபரங்களின் பிரகாரம் ஆரம்ப முற்பணமொன்று அறவிடப்பட்டிருந்த போதும், காணிகளின் உள்ளபடியான விற்பனை விலையை அடிப்படையாகக் கொண்டு குறித்த வரித்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பொதுமக்கள் முறைப்பாடு**

(i) 2017 ஆம் ஆண்டின் போது சபைக்குக் கிடைத்த 105 பொதுமக்கள் முறைப்பாடுகளில் 50 முறைப்பாடுகளுக்கும், 2016 ஆம் ஆண்டின் போது கிடைத்த பொதுமக்கள் முறைப்பாடுகளில் 31 முறைப்பாடுகளுக்கும் இதுவரையிலும் தீர்வு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) திவுலப்பிட்டி வாராந்த சந்தையின் 03 ஆம் இலக்க கட்டிடத்தின் தென் பக்கமாகவுள்ள வியாபார நிலையம் வாடகைக்கு வழங்கப்படாதிருந்ததுடன்

நுகர்வோருக்கு இலகுவாக அக்கட்டிடத்திற்கு நுழைவதற்கு முடியுமான வகையில் கட்டிடம் நிர்மாணிக்கப்படாமை மற்றும் அந்த எல்லையில் அமைந்துள்ள மலசலகூடம் எந்நேரமும் வழிந்தோடுவதன் காரணமாக வியாபாரிகள் வாடகைக்கு எடுத்தலை நிராகரித்திருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 விளைவற்ற சொத்துக்கள்**

பிரதேச சபைக்குச் சொந்தமான கை உழவு இயந்திரம் 2002 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் 2018 யூன் 19 ஆந் திகதி வரையிலும் இது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5.2 வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

2017 ஆம் ஆண்டின் நூலகப் புத்தக மெய்மையாய்வின் பிரகாரம் தொலைந்து போன பெறுமதி குறிப்பிடப்படாத 216 புத்தகங்கள் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 பெறுகைகள்**

**ஒப்பந்த நிர்வாகம்**

நேரடியான ஒப்பந்த கையளித்தல் முறையின் கீழ் சமூக அடிப்படையிலான அமைப்புக்களுக்கு ஒப்பந்தம் கையளிக்கும் போது 2012 சனவரி 05 ஆந்திகதிய அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | | குறைபாடுகள் |
|---|---|---|---|
| (அ) | வருமான நிர்வாகம் | (i) | கடை வாடகை மதிப்பீடு செய்யப்படாமை. |
| | | (ii) | நிலுவை வருமானம் சேகரிக்கப்படாமை. |
| | | (iii) | ஆதனவரி திருத்தம் செய்யப்படாமை |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | பாதீடு நடைமுறைக்குப் பொருந்தாமை. |
| | | (ii) | பாதீட்டிற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையே முரண்கள் காணப்பட்டமை. |
| (இ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | | பொருட் பதிவேடு (இன்வென்ரி) முறையாகப் பேணப்படாமை |
| (ஈ) | கழிவுப்பொருள் முகாமைத்துவம் | (i) | கழிவுப்பொருள் வரி அறவிடப்படாமை. |
| | | (ii) | கழிவுப்பொருட்களை கொண்டு போடுவதற்காக பொருத்தமான காணியொன்று காணப்படாமை |